


**19.04.2025**

## தலைப்பு செய்திகள்

1. இரண்டு நாள் அரசுமுறை பயணமாக பிரதமர் திரு. நரேந்திரமோடி வரும் செவ்வாய்க்கிழமை சவுதி அரேபியா செல்கிறார்.

2. வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கி மத்தியஅரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் மருந்து பொருட்கள் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 30 பில்லியன் டாலர் அளவை எட்டி சாதனை படைத்துள்ளது.

4. புவிசார் குறியீட்டிற்கான மானியம் 25 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒருலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

5. **IPL 20-20** கிரிக்கெட் போட்டியில் அஹமதாபாத்தில் இன்று பிற்பகல் குஜராத் டைட்டன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

### பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி 2 நாள் பயணமாக வரும் செவ்வாய்க்கிழமை சவுதி அரேபியா செல்கிறார்.

வர்த்தகம், எரிசக்தி, தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையே வலுவான பிணைப்பு நிலவும் தருணத்தில் முதலீடு மற்றும் பாதுகாப்பு துறைகளில் தீவிர உயர்மட்ட அளவிலான ஒத்துழைப்பை அதிகரிக்க பிரதமரின் இந்த பயணம் வழிகோலும்.

பரஸ்பர மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் குறித்தும் சவுதி அரேபிய மன்னர் முகமது பின் சல்மானுடன், பிரதமர் முக்கிய ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு 2047-ல்** வளர்ச்சியடைந்த பாரதம் இலக்காக கொண்டு மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் மோகனூரில் தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் செயல்பட்டு வரும் இலவச நீட் பயிற்சி மையத்தில் மாணாக்கருடன் இன்று கலந்துரையாடிய அவர், ஏழை எளிய மாணாக்கரின் மருத்துவ கனவிற்கு இத்தகைய பயிற்சி மையங்கள் வழிகோலுவதாக கூறினார்.

இளம் தலைமுறையினர் நன்கு கல்வி பயின்று தங்களுக்கும், நாட்டிற்கும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்றார்.

.. **வாய்ஸ்** ..

அஇஅதிமுக, பி.ஜே.பி. வலிமையான கூட்டணி என கூறிய அவர், 2026 சட்டப்பேரவை தேர்தலில் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும் என்றார்.

திமுக, மத்திய அரசுடன் மோதல் போக்கை கடைபிடிப்பதால் தமிழக வளர்ச்சி பாதிக்கப் படுவதாகவும் குறைகூறினார்.

❖❖❖❖❖❖

**நயினார் நாகேந்திரன்**

**இதனிடையே திருவண்ணாமலையில் இன்று** செய்தியாளர்களிடம் பேசிய பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தமிழகத்தில் ஆட்சிமாற்றம் ஏற்படும் என தெரிவித்துள்ளார்.

திமுகவினர் பெண்களை பற்றி அவதூறாக பேசுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖

**மருந்தக ஏற்றுமதி**

**இந்தியாவின் மருந்து பொருட்கள் ஏற்றுமதி கடந்த மார்ச்** மாதம்வரை 30 பில்லியன் டாலர் அளவை எட்டி சாதனை படைத்துள்ளதாக மத்தியஅரசு தெரிவித்துள்ளது.

குறிப்பாக அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 14 சதவிகிதம் என்ற அளவை தாண்டியதுடன் பிரேசில், ஃபிரான்ஸ், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும், இந்திய மருந்து பொருட்களுக்கு அதிகளவிலான தேவை இருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

**சர்வசே கல்லீரல் தினம்**

**சர்வசே கல்லீரல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.**

உணவே மருந்து என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் ஆரோக்கியமான வாழ்க்கைமுறை எண்ணெய் மற்றும் கொழுப்பு சார்ந்த உணவுகளை தவிர்த்து கல்லீரல் நோய்களிலிருந்து பாதுகாத்து கொள்வது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்நாளையொட்டி பிரதமர் வெளியிட்ட செய்தியில் எண்ணெய் பயன்பாட்டைகுறைத்தல், எளிய உடற்பயிற்சிகள் உள்ளிட்டவற்றுடன் ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வெளியிட்ட செய்தியில் உணவே மருந்து என்ற அடிப்படையில் சிறிய மாற்றங்கள் கூட பெரிய மாறுதல்களை உருவாக்கும் என்றார்.

❖❖❖❖❖❖

## UPI

**2 ஆயிரம் ரூபாய்க்கும் மேலான UPI பண** பரிவர்த்தனைக்கு சரக்குசேவை வரி விதிக்கப்படும் என்ற செய்திகள் முற்றிலும் தவறானது என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில் இதுதொடர்பாக தற்போது எந்த முடிவும் பரிசீலனையில் இல்லை என்றும், இத்தகைய செய்திகள் மக்களை தவறாக வழிநடத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

வர்த்தகர்களின் தள்ளுபடி விலை சார்ந்த குறிப்பிட்ட சில பொருட்களுக்கு மட்டுமே சரக்கு சேவை வரி விதிக்கப்படும் எனவும் நிதியமைச்சம் குறிப்பிட்டுள்ளது.

❖❖❖❖❖❖

## ஆரியபட்டா

**இந்தியாவின் முதல் செயற்கைகோள்** ஆரியபட்டா விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டு இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

ஆரியபட்டா நாட்டின் எதிர்கால விண்வெளி திட்டங்களுக்கு அடித்தளமாக திகழ்ந்ததுடன், உலகளவில் செயற்கைகோளை அதன் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகராக நிலைநிறுத்திய 11-வது நாடு என்ற பெருமை இந்தியாவிற்கு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

## முதலமைச்சர்

**சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களால்** தமிழகம் மாபெரும் வளர்ச்சி காண்பதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் கலைஞர் கைவினை திட்டத்தை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர், தேசிய அளவில் தமிழகத்தில் மட்டும் 9.4 சதவிகித சிறு குறு நிறுவனங்கள் செயல்படுவதாக பெருமிதம் தெரிவித்தார்.

விரும்பிய எந்த தொழிலையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அடிப்படையில் கலைஞர் கைவினை திட்டம், கைவினைஞர்களை தொழில் முனைவோர்களாக மேம்படுத்தும் என்றார்.

இதற்காக 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ள நிலையில், 50 ஆயிரம் முதல் 3 லட்சம் ரூபாய் வரை மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும் என்றார்.

இதற்காக வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு 170 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் புவிசார் குறியீடு பெற வழங்கப்படும் மானியம் 25 ஆயிரத்திலிருந்து ஒருலட்சமாக அதிகரிப்பு,

சிறு குறு தொழில் நிறுவனங்கள் உள்நாட்டில் வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்க 2 லட்சம் ரூபாய் நிதியுதவி,

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு 5 கோடியில் ஆய்வகம் உள்ளிட்ட 5 முக்கிய அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

.. **வாய்ஸ்** ..

**முன்னதாக** தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் ஒருகோடியே 15 லட்சரூபாய் மதிப்பில் மகளிர் எம்ராய்டரிங் குழுமம்,

தஞ்சை பேராவூரணியில் 7 கோடியே 29 லட்சம் ரூபாய் மதிப்பில் கயிறு குழுமம்,

ராமநாதபுரம் மாவட்டம் வசந்த் நகரில் 6 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பில் நகை உற்பத்தி குழுமம் உள்ளிட்டவற்றை காணொலி மூலம் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖

**டி.ஆர்.பி.ராஜா**

**நாட்டிலேயே அதிகளவில் செல்போன் தயாரிக்கும்** மாநிலமாக தமிழகம் திகழ்வதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் இன்று பள்ளி நிகழ்ச்சியில் பேசியஅவர், மாணவர்கள் செல்போன்களை முறையாக பயன்படுத்தி கற்றலில் கவனம்செலுத்த வேண்டுமென்றார்.

❖❖❖❖❖❖

**தர்மபுரி வாய்ஸ்**

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரிகளில் போதைபொருள் எதிர்ப்பு மன்றம் உருவாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் தெரிவித்துள்ளார்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**டேனிஷ் கோட்டை வாய்ஸ்**

**மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி டேனிஷ்** கோட்டையை வரும் 24-ம் தேதிவரை சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் இலவசமாக கண்டுகளிக்க தொல்லியல்துறை அனுமதி வழங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**திற்பரப்பு அருவி**

**கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் தண்ணீர்வரத்து** அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மேற்குதொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்துவரும் மழையால் கோதையாறு, திற்பரப்பு அருவி உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

**தர்மபுரி ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து** இன்றுகாலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு நான்காயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖

**இருவரி - 1**

**சிவகங்கை, பெரம்பலூர் மாவட்டங்களில்** கோடைகால பயிற்சிமுகாம் வரும் வெள்ளிக்கிழமை முதல் 21 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

தடகளம், கூடைப்பந்து, ஹாக்கி உள்ளிட்ட பிரிவுகளில் சான்றிதழுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்.

**மீன்பிடி தடைகாலத்தை முன்னிட்டு தூத்துக்குடியில் மீன்களின் விலை அதிகரித்துள்ளது.**

பாரம்பரிய நாட்டுப்படகு மற்றும் ஃபைபர் படகு மீனவர்கள் மட்டுமே கடலுக்கு செல்வதால் சீலா, விளை, ஊழி, பாறை உள்ளிட்ட மீன்கள் கிலோ 300 ரூபாய் முதல் ஆயிரத்து 300 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

**திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில்** பொது இடங்களில் அரசியல் கட்சி கொடிக்கம்பங்களை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

வரும் 21-ம் தேதிக்குள் இப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததை அடுத்து இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்** அஹமதாபாத்தில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

ஜெய்பூரில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் - லக்னோ சூப்பர் ஜெயன்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖